

# ஆய்வகம் திறப்பு விழா

நெல்லை, பிப்.20-

பாளையங்கோட்டை அருகே அரியகுளத்தில் உள்ள சாரதா மகளிர் கல்லூரியில் நானோ ஆய்வகம் திறப்பு விழா மற்றும் பயிற்சி பட்டறை நடந்தது. கல்லூரி நிர்வாகி சுவாமி பக்தானந்த மகராஜ், செயலர் யதீசுவரி சரவணபவ பிரியா அம்பா ஆகியோர் குத்துவிளக்கேற்றி ஆய்வகத்தை திறந்து வைத்தனர். இயற்பியல் துறை தலைவர் உமை பார்வதி வரவேற்றார். கல்லூரி முதல்வர் மலர்விழி, கல்வி ஆலோசகர் மேஜர் சந்திரசேகர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சிறப்பு விருந்தினராக எஸ்.கணேசன் கலந்துகொண்டு, நானோ துகள்கள் தயாரிக்கும் முறை மற்றும் அதன் பண்புகள் பற்றி விளக்கினார். நெல்லை மாவட்டத்துக்கு உட்பட்ட 6 கல்லூரிகளை சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் பங்கேற்றனர். பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மகரஜோதி லட்சுமி நன்றி கூறினார்.